REGD. No. M. 6311 PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா

[illegible] 10 சதம்

மலர் 1] [இதழ் 192

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விபரம்
[illegible] (இலங்கை உட்பட)

ஒன்று	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஒன்று	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை : தைமீ 12உ திங்கள் (25—1—54) ★ ★ ★ வெளியூர் : தைமீ 13உ செவ்வாய் (26—1—54)

புத்தரை மறைத்தது பூதேவர்களே!

—(:)—

ஜாதியிலும் சீலமே சிறந்ததென்பதே புத்த அறம்

—(:)—

ஐவரைத் துணை கொண்டுத் துவங்கிய புத்தம் கோடிக்கணக்கானவர் கூடிய முகாமாக மாறியுள்ளது

மல்லலசேகராரின் விளக்கம்

ஈரோடு, ஜன. 25—

"புத்தர், தம்முடைய கோட்பாடுகளை முதல் முதலாக போதிக்கத் தொடங்கிய காலத்தில், அதைக் கேட்டுப் பயன்பெற ஐவரேதான் இருந்தனர்; பின்னர் பல்லாயிரவராகப் பெருகினர்."

"ஆணும்—பெண்ணும் சரிநிகர் சமானமானவர் என்ற உண்மையை முதல் முதலாக உணர்த்தியவர் புத்தர்தான். அந்தக் காலத்தில் கற்கவும், நூற்களைப் படிக்கவும், மதச் சொற்பொழிவுகளைக் கேட்கவும் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை."

"புத்தர் மறைந்த ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், புத்த மதம் இந்தியாவிலிருந்து மறைந்தொழிந்தது; புத்தரின் போதனைகளைப் பார்ப்பனர்கள் விரும்பவில்லை; உயர்ந்த ஒழுக்கத்திற்கு ஜாதி ஒரு தடையாகும் என்ற கருத்தை புத்தர் எதிர்த்து மறுத்தார்; குறிப்பிட்ட ஒரு ஜாதியில் பிறந்தவன் என்பதற்காக ஒருவன் பாராட்டப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக, ஒருவனிடம் உள்ள ஒழுக்கம், அறிவுடைமை, ஆகியவைகளைக் கொள்ள வேண்டும் என்றார்; ஒருவனுடைய சேவையும், அதனால் மற்றவர்களுக்கும் ஏற்படும் நற்பலன்களையும் பாராட்ட வேண்டுமென்றார்; பார்ப்பனர்களுக்கு அவைகள் பிடிக்கவில்லை; எனவே, தங்களுடைய செல்வாக்கையும், சக்தியையும் உபயோகப்படுத்தி, புத்த மதத்தை இந்தியாவைவிட்டே தொலைத்துத் தலை முழுகினர்; தங்களுடைய முயற்சியில் பார்ப்பனர்கள் முழு வெற்றியும் பெற்றனர்."

"அவருடைய திருப்பெயரும், அவருடைய உயர்ந்த கோட்பாடுகளும், அவர் பிறந்த மண்ணிலேயே கடந்த ஓராயிரம் ஆண்டுகளாக மறக்கப்பட்டு வந்தன.

"இந்தியாவின் பொற்காலமான அசோகர் காலத்தில் புத்த அறம் தழைத்தோங்கியது. நளாந்தா, விக்கிரமசீலா பல்கலைக் கழகங்கள் புத்தமத பல்கலைக் கழகங்களாகும். புத்த கலாச்சாரத்தை வழித்துணையாகவும், உயிருட்டியாகவும் கொண்டுதான் ஆசிய கலாச்சாரம் முழுதும் உருவெடுத்தது. மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் ஆசிய மக்களை ஒற்றுமைபாக்கியது புத்த அறமேயாகும். இந்தியாவில் புத்தம் கீழ்நோக்கத் துவங்கியதும், அதைத் தொடர்ந்த காரிருள்! பாரத் விடுபட்டதும், அதன் தலைவர்கள் மறுமுறையாக, புத்த அறத்தின் வாழ்த்தை நாடினர்.

"இந்திய தேசியக் கொடியில் பொறிக்கப்பட்டுள்ள 'தர்ம சக்கரம்' புத்த மதத்தின் முக்கிய அடையாளமாகும். அசோகனுடைய சிங்கம்தான் சர்க்காரின் முத்திரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது."

—ஈரோடில் நடைபெற்ற புத்தர் மாநாட்டில் தலைமைவகித்த சிலோன் பல்கலைக் கழகத்தில் புத்த கலாச்சாரத் துறை பேராசிரியராக உள்ள ஜி. டி. மல்லலசேகரா ஆற்றிய தலைமையுரையில் காணப்படுவது.

இந்தியில் பேசினால் தமிழர்கள் சகித்துக்கொள்ள வேண்டுமாம்!

—[o]—

காங்கிரஸ் நகரில் பண்டித நேரு கூறுகிறார்!

காங்கிரஸ் நகர், ஜன. 24—

காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஒரு பிரதிநிதி வங்காளியில் பேசியபோது, 'இந்தி, இந்தி!' என்று கூவியபோது பண்டித நேரு, அவருடைய செய்கையை வன்மையாகக் கண்டித்தார்.

வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் குஹாராய் வங்காளியில் பேச ஆரம்பித்ததும் 'இந்தியில் பேசுங்கள்' என்று கூச்சலிட்டனர்.

உடனே நேரு எழுந்து கூறியதாவது:—

"வங்காளி நம் தேச மொழிகளில் ஒன்று; யாரும் வங்காளியில் பேசக்கூடாதென்பது ஏன்? இந்தி தெரியாத சென்னைப் பிரதிநிதிகள், இந்தியை எப்படிப் புரிந்துகொள்வார்கள்?

"உங்கள் அரசியல் அமைப்பை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்தியில் பேசினால் சென்னைப் பிரதிநிதிகளும் கூச்சல் போடக்கூடாது. உங்களுக்குத் தாய்மொழி ஒரு மொழி தெரியவில்லையானால் அதை வீட்டில் போய் கற்றுக்கொள்ள வேண்டும்."

பிச்சையெடுக்கும் சிறுவரின் பரிதாபக் காட்சி!

வறுமையும்—வளமும் உச்சத்தில் உள்ளன!

புதுடில்லி, ஜன. 25—

கடந்த ஒரு திங்களாக அகில உலக சோஷலிஸ்ட் இளைஞர் குழுவினர் இந்தியத் துணைக் கண்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றனர். அளவு கடந்த வறுமையும் அளவு கடந்த செல்வப் பெருக்கும் அடுத்தடுத்துத் தேங்கிக் கிடப்பது, எல்லாவற்றைக் காட்டிலும் தங்களுடைய உள்ளங்களை அதிகமாக உறுத்தியுள்ளன என, அவர்கள் அறிவித்தனர்.

இந்த வறுமையிலும் மிகமிகக் கொடுமையானது, நகரங்களில் சிறிதளவும் பொலிவில்லாது பிச்சையெடுக்கும் சிறுவர்களின் பரிதாப நிலையேயாகும் என்றும், [illegible] அந்தக் [illegible] திருப்தியோடு [illegible] இருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

இத்தாலியில் உள்ள பிச்சை யெடுக்கும் சிறுவர்கள் முகங்களில் சிலசில சமயங்களில் சிரிப்பைக் காண முடியுமென்றும், ஆனால் மற்றச் சிறுவர்களிலும் தாங்கள் கீழானவர்கள் என்பதை அந்தச் சிறுவர்கள் ஒப்புக் கொள்ளுவதில்லை என்றும் அக்குழுவினரில் ஒருவர் விளக்கினார்.

கிடைத்துள்ள சுதந்திரத்தை உண்மையான சுதந்திரமாக மாற்ற வேண்டியதாக இருக்கிறது என்று குழுவினர் கருதுகின்றனர்.

கொரியாவிலுள்ள இந்தியப் படையினர்

அடுத்த மாதம் நாடு திரும்புவர்

கொரியா, ஜன. 24—

கொரியாவிலுள்ள இந்தியத் துருப்புகளின் வேலை முடிந்துவிட்டது. அவர்கள் அடுத்த மாதம் இந்தியாவுக்குப் புறப்படுவார்கள். அவர்களை அழைத்துவர 5 கப்பல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

முதலாவது கப்பல் அடுத்த மாதம் 6ந் தேதி இந்தியாவுக்குப் புறப்படும்.

கொரியாவில் புத்தக் கைதிகளைக் காவல் புரிய சுமார் ஐயாயிரம் இந்தியத் துருப்புகள் அங்கு சென்றிருக்கிறார்கள்.

துருக்கியில் புராதன பௌத்தசமய நூல்கள்

கொழும்பு, ஜன 25—

துருக்கி அரசாங்க லைப்ரரியில் அஸ்வகோஷ் என்கிற பௌத்த மேதையில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 'ஸாரிபுத்ர பிரகரணம்' என்ற புராதன நூல் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த கிரந்தங்களை ஆராய்ச்சி செய்ய புத்த பிட்சுக்களுக்கு துருக்கி சர்க்கார் அனுமதி தரத் தயாராக இருக்கிறது.

கழகத் தோழர்கள் வீட்டில் ஜப்தி

அம்மாப்பேட்டை, (சேலம்) ஜன. 25—

ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் 15 நாள் தண்டனை பெற்று சிறை சென்று மீண்ட தோழர்களான பி. எம். முத்துசாமி, பி. எம். கோபால் ஆகியோர் இல்லத்தில் 22—1—54ந் தேதி காலை 8-க்கு முறையே ரூ 400 பெறுமான 'ராலி' சைக்கிள் ஒன்றையும் ரூ. 107 பெறுமானமுள்ள கைக் கடிகாரம் ஒன்றையும் ஜப்தி செய்துகொண்டு சென்றுவிட்டார்கள்.

சிறைக் காலத் தண்டனை முழுவதையும் அனுபவித்த பிறகும் கூட, இவ்வாறு ஜப்தி செய்ததைக் கண்டு இவ்வூர் மக்கள் வருந்துகின்றனர்.

பைசாவின் சாய்ந்த கோபுரம்

வீழ்ந்து விடுமா?—எஞ்சினீயர் எச்சரிக்கை!

பீஸா நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரம் உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும். 1174-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1350-ல் கட்டி முடிக்கப்பட்ட இவ்வழகிய கோபுரத்தை இத்தாலிக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் எல்லோரும் பார்த்து ஆனந்திப்பதுண்டு.

ஆண்டுதோறும் 4 அங்குலம் சாயும் இக்கோபுரம், 200 ஆண்டுகளில் வீழ்ந்துவிடுமென இத்தாலிய எஞ்சினீயர்கள் அபிப்பிராயப்பட்டுள்ளனர்; ஆனால், 100 ஆண்டுகள்தான் இந்தக் கோபுரம் விழாமல் இருக்கக்கூடுமென அமெரிக்க இஞ்சினீயர் அபிப்பிராயப்பட்டார். போகப் போக, சாயும் வேகம் அதிகரிக்குமாதலால், இந்தக் கோபுரம் 200 ஆண்டுகள்வரை நிற்காது என அவர் தெரிவித்தார்.

ஆனால், கோபுரத்தின் தோற்றத்தை அழிக்காத முறையில், கோபுரம் இவ்வாறு சாய்வதை நிறுத்தினால், இக்கோபுரம் மேலும் ஆயிரம் ஆண்டுகள் இருக்கக்கூடுமென்றும், சாய்வதை நிறுத்துவதற்கு கையாள வேண்டிய முறைகளையும் அவர் தெரிவித்தார்.

மாஸ்கோ - பீகிங் நேர் ரயில் பாதை

பெர்லின், ஜன. 25—

மாஸ்கோ - பீகிங் ரயில்பாதை அமைப்பு அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டது என்றும் முதல் ரயில், மே மாதத்தில் ஓடலாம் என்றும் தெரிகிறது.

முதல் ரயிலில் பிரயாணம் செய்ய மாலங்கோவ், மாசேதுங் சம்மதம் தெரிவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்போது மாஸ்கோவிலிருந்து பீகிங் போக இரு வாரங்கள் ஆகின்றன; இந்த ரயில் ஓட ஆரம்பித்தால், மூன்றே நாளில் போய்ச் சேர்ந்துவிடலாம்.

எவரெஸ்டு ஆராய்ச்சி

சென்ற ஆண்டு டென்சிங்குடன் எவரெஸ்டை எட்டிய ஸர். எட்மண்ட் ஹிலாரியைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று, எவரெஸ்டுக்குத் தென்கிழக்குப் பகுதியை ஆராய வரப் போகிறது. இக்குழுவில் பெரும்பான்மையோர் நியூஸிலந்து வாசிகளாதலின் ஏதுவாகையில், இக்குழுவினருக்கு வேண்டிய உடை, கூடாரம், பாதரட்சை உள்பட பெரும்பாலான சாதனங்களை உதவ பிரிட்டன் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தக் குழு, மார்ச் மாதத்தில் காட்மாண்டு வந்து சேரும்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—1—1954 திங்கள்

சர்ச்சில் சிரிக்கிறார்!

"பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு"—நாட்டு மக்களுக்கு மிக மிக அதிகமான அளவுக்கு, காங்கிரஸ் பிரசாரகர்கள் அறிமுகப்படுத்தி வைத்த சொற்றொடர் இது—மேடைகள் அதிர அதிர, கேட்போர் உள்ளம் பதறப் பதற, இரத்தம் கொதிப்பெடுக்கும் விதமாக, இந்தச் சொற்றொடரை வீசினர்.

எந்தத் தலைவராகட்டும், அவர் எந்தச் செயலைப் புரியட்டும், அந்தச் செயலோ, தலைவரோ, காங்கிரசாருக்குப் பிடிக்கவில்லை என்றால், அவ்வளவுதான்—இந்தச் சொற்றொடரை எடுத்து வீசுவர்—மக்கள் 'கரகோஷம்' புரிவர். மக்களின் உள்ளத்தை வென்று விட்டோம் என்ற திருப்தியுடன், 'ஸ்ரீஜத்' வீடு திரும்புவார். அன்றிரவு அவர் கனவில் சட்டசபை தெரியும்; பில்லைச் சேவகன் எதிரே பணிவன்புடன் நிற்பது தெரியும்; திறப்பு விழா நடனமோ, ஆண்டு விழா இசையோ விருந்தாகும்; அது ஒரு காலம்! சிங்காரமாக சிறிய காலம்! மாளிகை மாடப் புறா ஆகிவிட்டவர்களுக்கு இதைச் சுட்டிக் காண்பித்தாலும், கோபந்தான் பிறக்கும்!!

"ராமஸ்வாமி முதலியார் எவ்வளவு அற்புதமாக ஆங்கிலம் பேசுகிறார், கேட்டீரா? வெள்ளைக்காரனே சொல்லும்படியாகப் புலமை பெற்றிருக்கிறார். அவர் பேச்சிலே தென்றலின் இனிமையும், அதேபோது, மலரின் நறுமணமும் கலந்து வருகிறது"—கூறினால் போதும், குல்லாயைச் சரிப்படுத்திக் கொண்டு, "ஆற்காட்டு முதலியாரின் ஆங்கிலந்தானே! எனப்பா அழகாகப் பேச மாட்டார்! இதுவும் பேசுவார். இதற்கு மேலும் பேசுவார்—எல்லாம் எதற்கு? பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டுக்கொண்டுதான்!" என்று கூறுவார் காங்கிரஸ் தலைவர்—பெரியவரோ, சிறியவரோ, நடுத்தரமோ, யாராக இருப்பினும்!

அவர் ஆஸ்பத்திரி கட்டப் பணம் தந்தார்.
இவர் கல்லூரிக்கு நன்கொடை அளித்தார்.
புதிய பிரசவ விடுதி, இவர் கட்டியதுதான்.

இவ்விதம் கூறப்படும்போதெல்லாம், அந்தச் சிறிய காரியங்களைச் செய்தவர்கள், தம் கட்சிக்காரர் அல்ல என்ற ஒரே காரணத்துக்காக, உதட்டைப் பிதுக்கி, குறும்புக் குறி காட்டிவிட்டு, "எல்லாம் எதற்காகச் செய்கிறார், தெரியுமோ! பட்டம் பதவிக்காகத்தான்!" என்று ஏசுவர்.

மட்டரகமான மனப் போக்கல்லவா இது என்று எடுத்துரைப்பதற்காக அல்ல, இதை இதுபோது குறிப்பிடுவது. மாற்றுக் கட்சிக்காரர்களை மனம் போன போக்கிலே ஏசுவதற்கு, "பட்டம் பதவி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்திய காங்கிரஸ்காரர்கள், இன்று அதே 'பட்டம் பதவி'யைப் பூசிக்கொண்டும், விலைக்கொண்டும் வாழ்வு நடாத்த வேண்டியவர்களாகிவிட்ட விந்தையை விளக்கத்தான் இதைக் குறிப்பிடுகிறோம்.

ஆளும் வெள்ளையன், தனக்கு அடிவருடிகளையும், ஆமாம் சாமிகளையும் உண்டாக்கிக்கொள்ளவே பட்டம் அளிக்கிறான், பதவி தருகிறான்—கிளிக்குக் கொவ்வை தருவது போல!—இது காங்கிரசார் கூறி வந்த தத்துவ விளக்கம்.

அந்த அக்கிரமக்காரன் அதுபோலச் செய்தான் என்றே வைத்துக்கொள்வோம்; இதோ, நல்லவர்கள் நாடாள வந்திருக்கிறார்களே, இவர்கள் விட்டொழிக்கலாமல்லவா, இந்த அநியாயத்தை!

பூடான்—ஒரு சிறு சமஸ்தானம்—இந்தியாவின் எல்லையிலே உள்ள சிறு கொல்லை; முல்லைக் காடுமல்ல.

அதற்கு ஒரு மகாராஜா! அவருக்கு ஒரு மகாராணி!!

எல்லையில் உள்ளவர்கள் என்ற காரணத்துக்காக இந்திய சர்க்கார், பூடான் மன்னருடன் ஒரு நேச உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறார்கள். மெத்தச் சந்தோஷம். பூடானுக்கு, யாராலாவது, எப்போதாவது, எவ்வகையிலாவது ஆபத்து ஏற்பட்டால், இந்தியப் படை உதவி அளிக்குமாம். அதனையும் சரி, என்போம். இயற்றுடன் நிற்கவில்லை, இங்கிதம் தெரிந்த இந்திய சர்க்கார். சென்ற கிழமை, மகாராஜாவையும், மகாராணியையும் மகத்தான முறையிலே வரவேற்றனர், இந்திய சர்க்கார்! மக்கள் மன்றத்திலேயே, பெருமளவு நேரத்தைச் செலவிடும் பண்டிதருக்கு ஓரோர் சமயமேனும் இப்படி ராஜாதி ராஜர்களிடம் உரசிக்கொள்வதிலே உல்லாசம் கிடைக்கக்கூடும். பெரியவர், தெறட்டும், குறுக்கே நிற்பாரில்லை. ஆனால், வழக்கமான, ராஜதந்திர உபசாரத்துடன் நின்றுவிடவில்லை; பூடான் மன்னருக்கு, இந்திய சர்க்கார் பத்மவிபூஷண் என்று பதக்கமும் பட்டமும் அளித்துள்ளனர். ஏன்? பரங்கியனல்லவா, பட்டமளித்து ஆள் பிடிப்பான்! பாதகன்! இவர்களுக்கு ஏன், அவன் முறை? கேட்கத் தோன்றும், உங்களுக்கு—எவருக்கும்—ஆனால், பெரிய இடத்து விவகாரம், கேட்டால் பிரமாதமாகக் கோபம் வரும்.

இந்தியாவுக்கு, மகத்தான 'சேவை' செய்தவருக்கு, பட்டம் அளித்து, மரியாதையையும், மகிழ்ச்சியையும், நன்றி பறிதலையும் தெரிவித்துக்கொள்ளும் திருநோக்குடன்தான், இந்திய சர்க்கார், பட்டம் அளிக்கும் முறையைப் புகுத்தி உள்ளனர், என்று காங்கிரசார் கூறுவது காதில் விழுகிறது.

இந்த விளக்கம் சரி, என்றே, வைத்துக்கொள்வோமே, தும், பூடான் மன்னருக்கு இந்தப் பட்டம் தருவது பொருந்துமா? பூடான் மன்னர், இந்தியாவுக்குச் செய்து தந்த மகத்தான 'சேவை' என்னவோ? இதுநாள் வரையில் எவருக்கும் தெரியவொட்டாதபடி அதை மறைத்து வைத்திருந்தார்கள் போலும்!! அடா அடா! அரசியல் மேடை, எவ்வளவு அயத்தங்களையும் தாங்கிக்கொள்ளும் என்ற துணிவு தவிர, பூடான் மன்னருக்கு பத்மவிபூஷண் என்ற பட்டம் தந்ததற்குக் காரணம், என்ன இருக்கிறது!

தண்டி யாத்திரைக்கு அவர் தளபதியாக இருந்தவரோ!

தனியாகக் காந்தியார் நவகாளியில் சென்றகாலை, சாந்தோபதேசத்துக்கான முறையை அண்ணலுக்கு அறிவித்தவரோ!

உப்புக் காய்ச்சியவரோ—அன்றி 'வெள்ளையனே வெளியே போ' என்ற வீர முழக்கத்துக்குக் கர்த்தாவோ!

ஏதைச் செய்தார் இந்த மன்னர்—என்ன காரணத்துக்காக இந்தப் பட்டம்!!

தகுதியற்று, காரணமற்று, வெள்ளைக்காரர்கள், பட்டம் பதவி கொடுத்து ஆட்களை மடக்கி வைக்கிறார்கள், என்று பேசிய பெரியவர்கள் இப்போது, பூடான் மன்னருக்குப் பட்டம் அளித்தது, எந்த நோக்கத்துடன்? கேள்வி, காங்கிரஸ் நண்பர்களுக்கு, கொட்டும் வண்டு போலத் தோன்றும். கோபித்துப் பயனில்லை — நிலைமையை அறிந்துகொள்ள முயலுங்கள் என்று காங்கிரஸ் அன்பர்களுக்குக் கூறுகிறோம். டில்லியில் நடத்தப்பட்டு வரும் அரசியல் நாடகம், எப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள், என்று கூறுகிறோம்.

ஒரிசா கவர்னராக, முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜா, நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரால், கவர்னர் பதவிக்கே புதிய பொலிவு கிடைக்கும் என்று கூறக்கூடிய அளவுக்கு நாம், குமாரசாமியாரிடம் பெருமதிப்பு கொள்ளத் தயார். ஆனால் முறை சரியா? அவருக்குப் பொதுமக்கள் தந்த பதில் என்ன, ஆட்சியாளர் தருகிற பரிசு எந்தவகை. சரியா? முதலமைச்சராக இருந்து முதிர்ந்த அனுபவம் பெற்றிருக்கிறார், நாணயத்திலும் நற்பண்பிலும் அவர் சிறந்தவர். மாற்றுக் கட்சி முகாமிலிருந்து நோக்கும் நமக்குக் கூட, அவர், கவர்னர் பதவிக்கு ஏற்றவரல்ல என்று கூறிடத் தோன்றாது—பண்பு இடந்தராது. ஆனால் நாம் கேட்பது, கவர்னர் பதவிக்குக் குமாரசாமி ராஜாவா என்பதல்ல—குமாரசாமி ராஜாவுக்கா கவர்னர் பதவி என்பதுமல்ல—நாம் கேட்பது முறை பற்றி—தேர்தலிலே தோற்றவருக்கு, கவர்னர் பதவியைத் தருவதா! முறைதானா இது? பதில் கூற முனையுமுன்பு, காங்கிரஸ் நண்பர்கள், வெள்ளைக்காரன், காங்கிரசல்லாதவர்களுக்கு, தகுதி திறமை காரணமாகப் பதவிகள் தந்தபோது, மேடைகளிலே, ஸ்ரீஜத்'கள் என்ன முழக்கமிட்டனர் என்பதை நினைவிலே கொண்டுவர வேண்டுகிறோம்.

தேர்தல் என்பது ஜனநாயகக் காட்டும், துலாக்கோல் அல்லவா! அதிலே, மக்கள் அளிக்கும் தீர்ப்பு அடுத்த ஐந்தாண்டுக்கு, அமுலில் இருப்பதல்லவா? எக்காரணம் கொண்டோ—நம்மைக் காரணம் கேட்டால், குமாரசாமியார் காங்கிரசாராக இருக்கிறாரே என்பது தவிர, அவர்மீது மக்கள் வெறுப்படைய காரணம் ஏதும் கிடையாது என்போம்—தேர்தலிலே, அவரை மக்கள் தோற்கடித்தனர். மக்களின் தீர்ப்புக்கு, டில்லி தரும், மதிப்பு எப்படி இருக்கிறது? தேர்தலில் தோற்ற சந்தானம் அவர்களை கவர்னராக்கிவிட்டது — இப்போது குமாரசாமியாருக்கும் பதவி தரப்பட்டிருக்கிறது. பட்டம் பதவி! பழைய சொற்கள்! பலரை, அரசியல் வாழ்விலிருந்து விரட்டி அடிக்கப் பயன்பட்டு வந்த வெடிகுண்டுகள்! இன்று, பட்டம் பதவி கொடுத்துத்தான், காங்கிரஸ், தன் சரிவைச் சரிப்படுத்திக் கொள்ள முடிகிறது. நிலைமை இது! சர்ச்சில் சிரிப்பது, உற்றுக் கேட்டால், காங்கிரஸ் நண்பர்களே! காதிலே விழும்!!

எதிர்கால உலகின் நல்வாழ்வு

வறுமையைப் போக்கும் நிலையைப் பொறுத்துள்ளது!

நியூயார்க், ஜன. 25—

"வறுமையால் வாடும் கோடிக்கணக்கான ஆசிய மக்களின் வாழ்க்கைத் தரம் சீக்கிரத்தில் முன்னேற்றமடைய, சிறந்த முறையை கண்டு பிடிக்க, ஜனநாயக இந்தியாவுக்கும், கம்யூனிஸ்டு சீனாவுக்குமிடையே நடைபெறும் போட்டி உலகத்தின் வருங்காலத்தை நிச்சயிக்கக்கூடும்,"

என்று, இந்தியாவில் முன்னாள் அமெரிக்க தூதுவராக இருந்த செஸ்டர் பௌல்ஸ் தெரிவித்தார். மேலும் அவர் சொன்னார்:—

"ஆசியாவுக்கு விஜயம் செய்யும் ஒவ்வொருவரும், இரண்டு விடயங்களைக் காண்பதுண்டு அவை, குடியாட்சி நடைபெற்றதின் அடையாளமும், இவ்வாட்சியால் மேற்கத்திய நாடுகளில் ஆசிய மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையும், இரண்டாவதாக ஆசியாவின் வறுமையும் ஆகும்.

"வறுமை என்பது ஆசியாவுக்குப் புதிதல்ல; வறுமையைப் போக்க வழியுண்டு என்பதை ஆசிய மக்கள் இப்பொழுது முதன் முதலாக உணர்ந்திருக்கின்றனர். இது ஆசியாவில் நடைபெறும் புரட்சியின் அடிப்படையும் சாரமும் ஆகும். தங்கள் வாழ்க்கைத்தரத்தை சீக்கிரத்தில் உயர்த்த வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். இதைப்பெறுவதற்கு, கம்யூனிஸ்டு முறைகளா அல்லது ஜனநாயக முறைகளா சிறந்தவை என முடிவு செய்வதில், சீனாவும்—இந்தியாவும் முனைந்திருக்கின்றன. இதன் முடிவு, எல்லோருடைய வருங்காலத்தையும் நிச்சயிக்கக் கூடும்.

'கம்யூனிஸ்டுகள் என்ன செய்தார்கள்,' என்பதை, சீனா, ஆசியாவுக்கு எடுத்துக் காட்டுவதற்காக, ரஷ்யா, நூற்றுப்பது கோடி டாலர்கள் சீனாவுக்கு உதவியுள்ளது. இதற்கு எட்டிலொரு பங்கை, இப்பொழுது அமெரிக்கா, இந்தியாவுக்கு அளிக்கின்றது. இப்போட்டியில் இந்தியா வெற்றி பெறுமானால், ஆசியாவில் திடமான நிலை ஏற்படும். இந்தியா வெற்றியடையாவிட்டால் சுதந்திர ஆசியா வீழ்ந்துவிடும்."

அரக்கோணம் ரயில் நிறுத்த வழக்கு

—::—

அரக்கோணம், ஜன. 25—

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி உள்பட 23 தோழர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு 15 வாயிதாக்கள் போட்டும் இன்னும் விசாரிக்கவில்லை என்பதும், இந்த வழக்கில் ஈடுபட்டுள்ள தோழர்கள் பெரும்பாலோர் பூந்தமல்லியிலிருந்தும் திருத்தணியிலிருந்தும் அரக்கோணம் கோர்ட்டுக்கு வந்து தொல்லை அனுபவிப்பது தோழர்கள் அறிந்ததே.

20—1—54-ந் தேதி வழக்கிற்கு, திருத்தணி தி. மு. கழகச் செயலாளர் நாராயணசாமி, ரஹீம் ஆகியவர்களை அரக்கோணம் ரயில்வே போலீசாரால் கைது செய்யப்பட்டு, விலங்கிட்டு வீதி வழியே அழைத்து வரப்பட்டார்கள்.

20-ந் தேதி நடைபெற இருந்த வழக்கு போலீஸ் தரப்பினர் வராததால் 27-1-54-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கைது செய்த போலீஸ் அதிகாரிகள் ஆந்திராவில் இருப்பதால் வரத்தாமதமென்றும், 27ந் தேதி விசாரித்து தீர்ப்பு அளித்து விடுவதாகவும் மாஜிஸ்திரேட் வாக்களித்தார். இன்றைய வழக்கிற்கு 21 தோழர்கள் ஆஜராகி இருந்தனர்.

விநாயகம் குழுவினர்மீது வழக்கு

அரக்கோணம், ஜன 25—

26—9—53-ந் தேதி திருத்தணியில் நடந்த தி. மு. கழகக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தும், தோழர்களைத் தாக்கியும், ஏ. எல். சி. கிருஷ்ணசாமியின் காரை சேதப்படுத்தியதாகவும், திருத்தணி போலீசாரால் குற்றம் சாட்டி பஞ்சாயத்துபோர்டு உபதலைவர் உள்பட விநாயகம் குழுவினரைச் சேர்ந்த அறுவர் மீது தொடுத்திருந்த வழக்கு, 19—1—54-ல், சித்தூர் எஸ். டி. எம். கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 6-வது எதிரி கோர்ட்டில் ஆஜர் ஆகாததால், எதிரிக்குக் கொடுத்திருந்த ஜாமீனை ரத்து செய்து விட்டு, கைது செய்து 2-2-54ல், கோர்ட்டில் ஆஜர் செய்யும்படி உத்திரவிட்டார்.

வழக்கு 2—2—54-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கைத்தறித் துணிகள்

எல்லா மாநிலங்களிலும் காட்சிக்கு வைக்கப்படும்

புதுடில்லி, ஜன, 25—

இந்தியாவின் பல பாகங்களில் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளை எல்லா மாநிலங்களிலும் காட்சிக்கு வைக்க சமுதாய நலன் திட்ட நிர்வாகம் உத்தேசித்துள்ளது

எல்லா மாநிலங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளில், ரகத்திற்கு ஒன்றாக சேர்ந்த செட் மூவாயிரம் ரூபாய் ஆகிறதாம்; இந்திய சர்க்கார், இவைகளைப் பணம் கொடுத்து வாங்கி மாநில சர்க்கார்களுக்குக் கொடுக்கும் இந்த கண்காட்சிக்கான செலவுகளை ஏற்க கைத்தொழில் போர்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ரூ ஐயாயிரம் ஒதுக்கும்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

முன் (18-1-54 இதழ்) தொடர்ச்சி: 11444—9—11

வாணியம்பாடி வள்ளுவர் வாசகசாலைத் தோழர்கள்: என் ஆர். ஜெகநாதன், சி. என். இளங்கோவன், டி. ஜெ. நாதன், ஜெ. கண்ணப்பன், பெ. ஞானசுந்தர்; எ. ஜி. சேசன, டி. வி. ராமன், டி. மூர்த்தி, ஆர். ராசகோபாலன் ஆகியோர்	13—8—0
சி. முட்லூர் வி. பழமலை	1—0—0
,, என். தட்சணாமூர்த்தி	1—0—0
,, பாலகிருஷ்ணன், ஆதிமூலம்	1—0—0
வடசேரி—நாகர்கோவில் அனுதாபிகள் சிலர்	2—5—0
ஆரல்வாய்மொழி என். சண்முகம்	1—0—0
சீர்காழி க. கணபதி	1—0—0
,, க. முத்துகுமாரசாமி	1—0—0
,, அப்துல் ரஷீத்	1—0—0
,, சின்னப்பிள்ளை	1—0—0
,, அ. கோதண்டபாணி	1—8—0
கடவின் (சிலோன்) ஜே. பிச்சக்கனி	5—0—0
ஆரல்வாய்மொழி கே. கங்காதரன்	2—0—0
விருத்தாசலம் எஸ். பி. சங்கரபாண்டியன்	1—0—0
லாலகுடி எல். எஸ். சரஸ்வதி	2—0—0
சென்னை வண்ணாரப்பேட்டை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்ட உண்டி வசூல்	26—0—0
கோடைக்கானல் எம். பி. அப்துல் கரீம்	1—0—0
பொன்வளம் பி. முத்து	1—0—0
,, எம். கண்ணம்மா	1—0—0
வெள்ளக்கோயில் என. பாலாமணி	1—0—0
கன்னபுரம் வேலன்	1—0—0
,, கே. எஸ். எஸ். மணி	1—0—0
ஒல்லப்பாளையம் கே. மாரிமுத்து	2—0—0
,, ராசு, ராமச்சந்திரன்	1—0—0
உப்புப்பாளையம் கே. எஸ். பெரியசாமி, கா. பாளையம், பொன்னம்பலம்	1—8—0
சென்னை தன-புச்சிபாபு, கணேசன், கஜேந்திரன், மதனகோபால், நல்லப்பன், தேவராசன், முனிசாமி, ராதாகிருஷ்ணன், இளங்கோவரோசு, சம்புலிங்கம், தியாகசுந்தரம், சுந்தரமூர்த்தி ஆகியோர்	6—0—0
போடிநாயக்கனூர் என். சுருளிமணி	6—0—0
,, எஸ். வி. கருப்பையா	3—0—0
,, எஸ். கே. சண்முகையா	5—0—0
,, க. வீரப்பன்	3—0—0
,, பரமசிவன்	3—0—0
,, கணபதி	3—0—0
,, எம். செல்வராஜ்	3—0—0
,, பெரிய குருசாமி	2—0—0
,, சின்ன குருசாமி	2—0—0
,, நாராயணன்	2—0—0
,, மாரிமுத்து	1—0—0
,, பி. குருசாமி	2—0—0
,, கே. பால்	2—0—0
,, கே. மாரிமுத்து	2—0—0
,, சூர்யபிரகாஷ், வீராசாமி, சுப்ரமணி ஆகியோர்	3—8—0
மூணார் என். நைனன்	4—0—0
,, வி. ராசபாண்டியன்	3—0—0
,, ரத்தினம்	2—0—0
சென்னை திருவல்லிக்கேணி பாண்டியன் படிப்பக சார்பில் 2—1—54ல் நடந்த பொதுக்கூட்ட வசூல்	32—3—6
,, ஷெ. பாண்டியன் படிப்பகத்தார் நன்கொடை	20—0—0
திருநெல்வேலி தோழர்கள்:—	
திரவியம்	1—5—0
ராமசாமி	1—0—0
டி. தாமன்	1—0—0
பி. எஸ். நாதன்	1—0—0
வி. சின்னதுரை	1—0—0
வி. மேவு நாடார்	1—0—0
எஸ். மணி நாடார்	1—0—0
பி. ஆர். லட்சமணன்	1—0—0
மு. பாலு	1—0—0
ஆர். சண்முகம்	2—0—0
மணி	1—0—0
ந. வெ. சு. ரத்தினம்	1—0—0
கே. சின்னையன்	1—0—0
வி. பாலையா	1—0—0
எ. ராஜி	1—0—0
மு. சண்முகக்கனி	1—0—0
ஆதியப்ப நாடார்	1—0—0
கே. தங்கப்ப நாடார்	1—0—0
கே. ராமசாமி	2—0—0
சி. என். ரத்தினம்	1—0—0
கே. எஸ். எ. பாண்டியன்	1—0—0
மி. நாராயணசாமி	3—0—0
தமிழ்ப்பித்தன்	1—0—0
என். ஆர். கோபால்	1—0—0
குலாமோதின்	1—0—0
பி. எம். பி. முத்து	1—0—0
டி. ஏ. குப்புசாமி	1—0—0
சோமசுந்தரம்	1—0—0
கோவிந்தன்	1—0—0
கே. கே. நம்பியார்	1—0—0
வி. சுப்ரமணி	1—0—0
ஜெ. ரங்கநாதன்	1—0—0
தேவநாதன்	1—0—0
ஜெயசிங்	2—0—0
எம். துரைசாமி	1—0—0
தனுஷ்கோடி	1—0—0
என. குப்புமுத்து	5—0—0
எம். வி. சம்பந்தமூர்த்தி	1—0—0
வி. சின்னதம்பி	2—0—0
எஸ். எம். சின்னசாமி	2—0—0
சு. அன்பழகன்	5—0—0
செல்லையா	2—0—0
ராமதாஸ்	1—0—0
முத்துசாமி	1—0—0
எம். வி. சுந்தரமூர்த்தி	1—0—0
பி. சிங்காரம்	1—0—0
பாலகுருசாமி	1—0—0
எம். ஆர். பாண்டியன்	1—0—0
எம். துரை	1—0—0
முத்துசாமி	1—0—0
மயிலேறி	1—0—0
சீனிவாசன்	1—0—0
ஏழுமலை	1—0—0
பழனி	1—0—0
ஐ. எஸ். எம. சூர்யா சிட் பண்ட்	2—0—0
நாகரத்தினம்	2—0—0
மகாலிங்கம், கருப்பையா நாடார், வேணு நாடார், முத்தையா, ஆறுமுக நாடார், அருணாசலம், மேகலிங்கம், சுந்தரேசன, ராமசாமி, ஆறுமுகம், எம் கே. சபா, உசேன் ஆகியோர்	5—12—0
சென்னை-மயிலைத் தோழர்கள் :—	
டி. துரைசாமி	1—0—0
கோவிந்த நாயர்	1—0—0
கோரா	1—0—0
ஏ. பிரபாகரன்	1—0—0
ராதாகிருஷ்ணன், சுந்தரம், மணி, ஆறுமுகம், லோகநாதன், முருகேசன ஆகியோர்.	3—0—0
சென்னை-3 தென்பகுதி புகை வண்டித் தொடர் தலைமை அலுவலக அனுதாபிகள் (2-வது முறை)	27—0—0
செங்கற்பட்டு திருமதி அன்னபூரணி—அழகிரி	5—0—0
சென்னை-1 தலைமை அஞ்சல் அலுவலக (ஜி. பி. ஒ) தோழர்கள்	10—0—0
குறிஞ்சிப்பாடி மணி அன்பன்	10—0—0
தென்னூத்தூர் தி. மு. கழக ஆதரவாளர்கள் தோழர் இளங்கோவன் மூலம்	6—8—0
குன்னத்தூர் எம். வெங்கடராமன்	1—0—0
சென்னை—தங்கம்பாக்கம் தோழர்கள்:-	
அ. கிருஷ்ணசாமி	1—0—0
ந. தி. அரசு	1—0—0
எ. குப்புசாமி	1—0—0
மு. சீனிவாசன்	1—0—0
இரா. பாலகிருஷ்ணன்	1—0—0
எம். ஜி. துரை	1—4—0
பாபு, ராமமூர்த்தி அய்யர், குப்புசுந்தரம், உத்தமன், பாலசுப்ரமணியன், ஜெகநாதன் ஆகியோர்	1—12—0
காஷ்மீர் ராணுவத் தோழர்கள்	6—0—0
பூந்தமல்லி நாடகத்தில் கைத்தறிப் பை ஏலம் விட்டதில் வரவு	10—0—0
வேலூர்-சத்துவாச்சாரி தி.மு. கழகம்	11—0—0
சென்னை-12 எம். எஸ். கோவிந்தராசன்	1—0—0
வடலூர் கி. மு. நடராசன்	2—0—0
,, அ. ஆறுமுகம்	2—0—0
கல்லிப்பாளையம் கே. குப்புசாமி	5—0—0
,, என். ஆறுமுகம்	5—0—0
,, லோ. கருப்பையா	2—0—0
வேலூர்—சேலம் காசிலிங்கம்	2—0—0
சென்னை—பெரம்பூர் மகிழ்நன்	1—0—0
கோழிக்கோடு தி. மு. கழகம்	15—0—0
தஞ்சாவூர் ஹிமெ கூட்டுறவுப் பள்ளிப் பயிற்சிக் கழக மாணவர்கள் சார்பில்	16—10—0
மாரங்கியூர் கே. அண்ணாமலை	1—0—0
,, அருணகிரி	2—0—0
,, கோவிந்தராஜி	1—0—0
,, க. துரைசாமி	1—0—0
,, சக்கரவர்த்தி	1—0—0
,, வீராசாமி, கிருஷ்ணசாமி, ஜானகியம்மாள், மாசி, பாண்டுரங்கன், அனீப், நடேசன், ராமச்சந்திரன், கிஷ்டன், குவலையன், ராமசாமி, வீரமுத்து, வடிவேல், கிஷ்டப்பன், ராஜேந்திரன், அய்யாசாமி, கோபால், தங்கவேல், குள்ளம்மாள், கோவிந்தசாமி, சுப்பராயன், மாரிமுத்து, ராமசாமி, வீரப்பன், பாப்பம்மாள், பெருமாள், பாப்பாத்தி ஆகியோர்	4—7—0
சென்னை ஸ்பென்சர் கம்பெனி கான்டீன் தொழிலாளர்கள் காஞ்சில் பாலகிருஷ்ணன், அச்சுதன், மாரிமுத்து, கிருஷ்ணன், வேலாயுதம், ...	

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 25—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. அரிகர அய்யர் முன்பு நடைபெற்று வருகிறது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களின் விசாரணை விவரம் தொடர்ந்து தரப்படுகிறது :—

தூத்துக்குடி சர்க்கார் ஆஸ்பத்திரி சர்ஜன் டாக்டர் பி. வி. நாராயணஸ்வாமி (83-வது சாட்சி) மறுமுறை விசாரிக்கப்பட்டார்.

சுப்பையா (சா. 41), வெங்கடாசலம் (சா. 39), திருமால் (சா 42), பாஸ்கரன் (நூறுவது சாட்சி) ஆகியோர் கலவரத்தில் காயமடைந்தபோது, தான் சிகிச்சை செய்ததாகத் தெரிவித்து, மேற்படி நபர்களையும் அவர் அடையாளம் காட்டினார்.

திரு. செல்லையப்ப பிள்ளையால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், மேற்படி நபர்களின் காயங்களின் விபரத்தை சாட்சி எடுத்துரைத்தார்.

99-வது சாட்சி

பின்னர், மாஜிஸ்டிரேட் குமாஸ்தா எஸ். பிச்சையப்பா விசாரிக்கப்படுகையில் தெரிவித்ததாவது :—

"ஆறுமுகம் (1-வது சாட்சி) அப்ரூவராக மாறியது சம்பந்தமாக ஜில்லா மாஜிஸ்திரேட், நெல்லை கலெக்டர் ஆகியோரிடமிருந்து சப்-கலெக்டருக்கும், நிர்வாக முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டிற்கும் வந்த உத்திரவு கடிதத்தைப் பற்றி எடுத்துரைத்தார்."

100-வது சாட்சி

மலபார் விசேஷ போலீஸ் படையைச் சேர்ந்த ஆர். பி. பாஸ்கரன் (நூறுவது சாட்சி) அடுத்தபடியாக விசாரிக்கப்பட்டார். அவர் தெரிவித்ததாவது :—

"கடந்த ஜூலை 15-ம் தேதி பந்தோபஸ்து அலுவலுக்காக நியமிக்கப்பட்டிருந்தேன்; பிளாட்பாரத்தில் நானும், என் குழுவினரும் நின்று கொண்டிருக்கையில், என்னை மேலூருக்கு வரும்படி உத்திரவு வந்தது; மேலூர் ஸ்டேஷன் அருகே ஒரு ரயில் வண்டி நின்றுகொண்டிருந்தது; சுமார் இருநூறு பேர் வண்டிக்கு முன்னால் உள்ள தண்டவாளத்தின் மேல் உட்கார்ந்திருந்தனர்; வண்டிக்கு இருபுறத்திலும் சுமார் இரண்டாயிரம் பேருக்கு மேல் நின்று கொண்டிருந்தனர்; ரயில் பாதையில் உட்கார்ந்து இருப்பவர்களை முதலில் எச்சரித்துவிட்டு, பின்னர் தடியடிப் பிரயோகம் செய்தோம்; உடனே வண்டிக்குப் பக்கத்திலுள்ள மக்கள் கூட்டம் கற்களை வீச ஆரம்பித்தது; இதனால் எனது இடது காலில் பலத்த காயம் ஏற்பட்டது; என் உருக்குத் தொப்பியும், சொட்டை ஆயிற்று; பின்னரே நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம்."

குறுக்கு விசாரணை செய்ப்படுகையில் சாட்சி கூறியதாவது :—

"துப்பாக்கிப் பிரயோகத்தினால் மூவர் மரணமடைந்தனர்; இறந்தவர்கள் ரயில்வே ஸ்டேஷன் எல்லைக்குள் இருந்தனரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது."

1 1-வது சாட்சி

அடுத்து, கண்ட்ராக்டர் எஸ். மாடசாமி விசாரிக்கப்பட்டபோது கூறியதாவது :—

"61-வது சாட்சியான அப்பாசிடமிருந்து, போலீசார் மூக்குக் கண்ணாடியைக் கைப்பற்றியபோது தயாரித்த அத்தாட்சி பத்திரத்தில் நான் கையெழுத்திட்டேன்."

102-வது சாட்சி

சிவகாம் பிராஞ்சு சப்-இன்ஸ்பெக்டர் ஆர். சிவசுப்ரமணியன் விசாரிக்கப்படுகையில் கூறியதாவது :-

"1953 ஜூலை மாதத்தில் தூத்துக்குடியில் நான் கிரைம் பிராஞ்சு ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தேன்; என்னுடைய மேலதிகாரிகளின் உத்திரவுப்படி வழக்கு சம்பந்தமான புலன் விசாரணையில் ஸ்பெஷல் டியூடி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணப்பருக்கு நான் உதவியாக இருந்தேன்; ஜூலை 18-ந் தேதியன்றும் அதையொட்டிய நாட்களிலும் பிராஸிகியூஷன் தரப்பில், 23, 86, 89, 25, 88, 26, 84, 78, 63, 61-வதாக சாட்சியமளித்தவர்களின் வீடுகளிலிருந்து நான் பல சேதமுற்ற சாமான்களைக் கைப்பற்றினேன்; இவற்றை நான் கைப்பற்றிய போது பிரசன்னமாயிருந்தவர்களிடமிருந்து அத்தாட்சிகளில் கையொப்பங்கள் வாங்கினேன்; மூக்குக் கண்ணாடி, டைம்பீஸ் போன்ற சாமான்களையும் நான் கைப்பற்றினேன்."

திரு. பி. ஏ. தங்கசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது :

"சாமான்களைக் கைப்பற்றிய போது என்னுடன் நான் ஒருவரையும் அழைத்துச் செல்லவில்லை."

திரு. ஆர். தண்டபாணி குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது :

"சேதப்பட்ட சாமான்களைக் கைப்பற்றியது சம்பந்தமாக நான் எந்த வீட்டையும் சோதனையிடவில்லை; சில நாட்களுக்குப் பிறகு அத்தாட்சிகளுடன் சாமான்களை அனுப்பி வைத்தேன்."

103-வது சாட்சி

அடுத்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனாப் மோஹிதீன் பாச்சா விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

"1953 ஜூலையில் நான் தூத்துக்குடியில் விசேஷ டியூடியில் இருந்தேன், போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உத்தரவின் பேரில் புதுக்கிராமத்தில், சீனிவாச அய்யங்கார், ராமகிருஷ்ண அய்யர், சாமிகுளத்து அய்யர், நாராயண அய்யங்கார் ஆகியோர் வீடுகளிலிருந்து சேதமடைந்த பல சாமான்களைக் கைப்பற்றினேன்."

"சாட்சி கோர்ட்டில் சாமான்களை அடையாளம் காட்டினார்."

பரோலில் இரண்டு நாட்களுக்கு விடுதலை செய்யப்பட்ட எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார்.

104-வது சாட்சி

அடுத்து, சுப்ரமணியம் என்பவர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

"நான் புதுக் கிராமத்தில் வசித்து வருகிறேன்; என் வீடு தெற்கு நோக்கியிருக்கிறது; ஜூலை 15-ந் தேதி காலை 9 மணிக்கு கிழக்கிலிருந்து ஒரு கூட்டம் கோஷங்களை எழுப்பிக்கொண்டு வந்தது; நான் வீட்டின் இரும்புக் கதவுகளைப் பூட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டேன்; காலை பத்து மணிக்கு மற்றொரு கூட்டம் கோஷங்களை எழுப்பிக்கொண்டு வந்தது; கூட்டத்தில் பாரோசிலர் இரும்புக் கதவுகளை உடைத்தனர்; நான் வெளியே வந்தேன்; என் வீட்டின் எதிரில் ஒரு இரும்பு கம்பி கிடந்தது."

திரு. வி. என். கந்தப்பர்வால்

(4-ம் பக்கம் பார்க்க)

ஈரோடு மாநாடுகள்

ஈரோடு, ஜன. 24—

கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு இன்று ஈரோட்டில் தொடங்கியது. மாநாட்டிற்கு அண்ணாமலை பல்கலைக் கழக முன்னாள் தமிழ் வேந்தர் தோழர் மணவாள ராமானுசம் தலைமை வகித்தார். மாநாட்டை தோழர் எஸ். பி. ஆதித்தன் அவர்கள் திறந்து வைத்தார்.

நேற்று மாலை புத்தர் மாநாடு நடைபெற்றது. பெரியார் ஈ. வே. ரா., புத்தர் படத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார்.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன், ஆசைத்தம்பி ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

மாநாட்டில் கலைவாணர் என். எஸ். கே. குழுவினரின் 'புத்தர் மகான்' வில்லுப்பாட்டு நடைபெற்றது.

கல்லூரி மாணவர் தமிழ் விழா

★

வண்ணை தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்

26-1-54 மாலை 5-30 மணிக்கு

தோழர்

அண்ணாதுரை

சொற்பொழிவாற்றுவார்.

நாடகமும் உண்டு

குடியரசு தினத்தில் இனாம் தேநீர்!

அசாந், ஜன 23—

புரோச் நகர மக்களுக்கு, குடியரசு தினத்தில் இனாமாக தேநீர் வழங்கப் போவதாக நகரசிற்றுண்டிச்சாலையார் இருவர் அறிவித்துள்ளனர். மற்றொருவர் பாதி விலையில் தேனீர் தருவதென முடிவிற்கு வந்திருக்கிறார்.

• • •

பாதி கூலி பெற்றுக்கொண்டு க்ஷவரம் செய்யப் போவதாகவும், அந்தப் பாதிக் கூலியையும் ஒரு உடற் பயிற்சிக் கழகத்துக்கு நிதியாகக் கொடுத்து விடப் போவதாகவும் ஒருவர் அறிவிக்கிறார்.

* * *

அதே ஊரிலுள்ள மற்றொரு க்ஷவரத் தொழிலாளர் பிச்சைக்காரர்களுக்கும், வேலையற்றோருக்கும் இனாமாக முக க்ஷவரம் செய்யப் போவதாக சில நாளைக்கு முன் அறிவித்துள்ளார்.

• • *

சென்னை, ஜன. 24—

குடியரசுத் தினத்தை யொட்டி சென்னை ஒற்றைவாடை ரோட்டிலுள்ள 'ஸ்டார் ஹேர் கட்டிங் சலூன்' என்ற க்ஷவரக் கடையில் காலை 7-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை இலவச க்ஷவரம் செய்யப்படும் என அந்தக் கடையின் சொந்தக்காரர் ஏ. சுப்ரமணியம் அறிவித்துள்ளார்.

• • •

உதகை, ஜன. 23—

உதகமண்டலம் யால் செய்ப் ரோட்டில் இருக்கும் க்ஷவரக் கடையில் 26-ந் தேதி செவ்வாய்க்கிழமையன்று மட்டும், காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையில் ஏழைகளுக்கு இலவசமாக க்ஷவரம் செய்யப்படும் என கடையின் சொந்தக்காரரான அந்தோனிசாமி அறிவித்திருக்கிறார்.

டில்லி, ஜன. 23—

இந்தியாவிற்கும் — பிரிட்டனுக்கும் இடையே போய்வந்துகொண்டிருந்த பி. அண்ட் ஓ. கப்பல் 'மூல்டான்' இனி பயன்படாது என்று கருதப்பட்டு

தொழிற் கல்வி கண்காட்சி

முக்கிய அறிவிப்பு

சென்னை, ஜன. 25—

சென்னையில் நடைபெறும் பார்க்கப் பெருங்காட்சி 26—1—54-ந் தேதியுடன் முடிவடைகிறது. ஆனால், கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் இன்டஸ்டிரியல் லேபர் வெல்பேர் அசோசியேஷன் லிமிடெட் நடத்தும் தொழிற் கல்வி கண்காட்சி 26—1—54 தேதி முதல் 2—2—54 தேதி வரை தொடர்ந்து இலவசமாகக் காட்டப்படும்

மோட்டார் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் ஒரு கூட்டமாக 25 பேருக்குக் குறையாமலும், 50 பேருக்கு அதிகப்படாமலும் வருபவர்களுக்கு மின்சாரம் இருக்கும்போது மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்களும், மின்சாரம் இல்லாதபோது மற்ற இயந்திரங்களும் கூடுமானவரை காலை 9 மணி முதல், மாலை 6 மணிவரை விளக்கிக் காட்டப்படும் வரிசைக் கிரமமாக முதலில் வரும் கூட்டங்களுக்கு முதலில் காட்டப்படும். வருபவர்கள் தங்கள் ஆசிரியர்களையோ, அல்லது தாங்கள் வழியும் புரியும் தொழிற்சாலையின் அல்லது ஸ்தாபனத்தின் நிர்வாகத்தினரிடமிருந்து பெற்ற நற்சாட்சிக் கடிதமோ கொண்டுவர வேண்டும்

எஸ். எஸ். எல். சி வகுப்பிலும், அதற்கு மேல் வகுப்புகளிலும் படிக்கும் மாணவிகள் கூட்டமாக வந்தாலும், 12-வயதிற்கு மேற்பட்ட மற்ற பெண்கள் கூட்டமாக வந்தாலும் மேல் குறிப்பிட்ட தேதிகளில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை குடும்ப சாஸ்திரமும், மாதிரி அடுப்பின் சாதனங்களும் விளக்கிக் காட்டப்படும்.

கைத்தறி துணி விற்பனை

பம்பாய் தி. மு. கழகம்

தாராவி, ஜன 25—

9—1—54-ல், தோழர் பி. என் செல்லையா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின் முடிவுப்படி தோழர் என் தியாகராசன் தலைமையில் 10—1—54-ல், தோழர்கள் எஸ். திரவியராசன், பி. என் செல்லையா, சு. வள்ளிநாயகம், என் செழியன் எ. எஸ். ஆறுமுகம், த. மு. பொற்கோ. உ. அ. செல்லையா, எ. எல் பெருமாள், ஆரியசங்கரன், க தங்கவேலன், விக்டர் பென்னிமேன் ஆகியோர் உள்ளிட்ட பல தோழர்கள், தாராவி வீதிகளில், தோழர்கள் சண்முகநாதன், எ. சாம்ராஜ். சிறுமி பாருவதி ஆகியோர் இன்னிசை வழங்க, கைத்தறி விற்பனை செய்தனர். மொத்தம் ரூ 398—10—6-க்கு விற்பனையாயிற்று

* * *

தொட்டியகோட்டம்பட்டி தி. மு. கழகம்

11, 12, 13—1—54 தேதிகளில், தி. மு கழகக் கிளையின் சார்பில், கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 385—3—0. இப்பணியில் பெரும் பங்கேற்று நடத்திய தோழர்கள் எ முருகேசன், க. ராமகிருட்டிணன், தி மாரியப்பன், த. முருகேசன் ஆகியோராவர்.

* * *

ஆலந்தூர் தி. மு. கழகம்

10—1—54-ல், இக்கழகச் சார்பில், செயலாளர் இ. கோதண்டராமன் தலைமையில், 100 ரூபாய்க்குக் கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

* * *

திருமங்கலம் தி. மு. கழகம்

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு உறுப்பினர் தோழர் பெ. ம தர்மன் தலைமையில், தி மு. கழகச் சார்பில், 10—1—54-ல், கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டது. தோழர்கள் ரசாக், துலுக்கோடை, நடராசன், மன்னர், பக்கீர், அண்ணாமலை. கோஷ் முகம்மது, திராவிடமணி, ராட்டுவோசிக் கந்தர், மைதீன், ஆறுமுகம், கந்தசாமி ஆகியோரால் மொத்தம் ரூ 699—5—9-க்கு விற்பனை செய்யப்பட்டது.

சி. பி. சிற்றரசு

ஆமதாபாத் பொங்கல் விழா பொதுக் கூட்டங்களிலும், திருமணங்களிலும் சொற்பொழிவாற்றவும், தூத்துக்குடி வழக்கு விடுதலை வரவேற்பு விழாவில் கலந்துகொள்ளவும், தோழர் சி. பி சிற்றரசு 21-ந் தேதி இரவு திருச்சியிலிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கிறார். 28-ந் தேதி வாக்கில் பம்பாயிலிருந்து திரும்புவார்.

காரியத்திலே கண்!

பம்பாய், ஜன. 23—

பம்பாய் பள்ளிக்கூடங்களில், இந்தி மொழி மூலமே கல்வி போதனை என்பது கட்டாயமாக்கப்பட்டால் இந்தி மொழியிலேயே பாடப் புஸ்தகங்களை வெளியிடுவதில் சிரமமிராது என்று பம்பாய் பிரசுரகர்த்தர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

மாயவரம் வருகை

★

நடராசன் நினைவு வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு, 31—1—54 ஞாயிறு மாலை நகரப் பூங்காவில் தோழர் ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ., தலைமையில், தோழர்கள் அண்ணாதுரை, கே. ஆர். சம்பந்தம், பி. ஏ., எம். எல் ஏ., ஆர். டாலகுருசாமி ஆகியோர் பேசுவர். அவ்வமயம் நடராசன் நினைவு வாசகசாலை சார்பில் வசூலித்து தூத்துக்குடி நிதிக்கு ரூ. 501 கொடுக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

(ஏலகிரி நகரம்)

தி. மு. முன்னேற்றக் கழக துவக்க விழா

26—1—54 மாலை 6 மணிக்கு

இடம்: வ. உ. சி. சதுக்கம்

பேசுபவர்:

தோழர் ஈ. வே. கி சம்பத்

★

திருவத்திபுரம்

(பொங்கல் விழா)

26-1—54 செவ்வாய்

தலைவர்: டி. எம். ரங்கசாமி

பேசுவோர்:

ஏ கோவிந்தசாமி, எம். எல் ஏ.

ஏ. எல் சி. கிருஷ்ணசாமி

27—1—54 புதன்

தலைவர்: போ. கா. இராமசாமி

பேசுவோர்:

ஏ. கே. வேலன்

வி. எஸ். கோவிந்தராசன்

28—1—54 வியாழன்

தலைவர்: மா. இராஜு

(தலைவர், ஊராட்சி மன்றம்)

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

காஞ்சி கல்யாணசுந்தரம்

திருச்சியில் அன்பழகன்

26—1—54 செவ்வாய் மாலை 6 மணிக்கு, தெப்பக்குளம், பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளி. காலேஜ் ஹிந்தி ஆண்டு விழா-பள்ளி மண்டபத்தில், தோழர் க. அன்பழகன் தலைமையில் கொண்டாடப்படும்.

தூத்துக்குடி......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

"நான் 11 மணிக்கு வழக்கம் போல் ஆபீசுக்குச் சென்றேன்; வீட்டுக் கதவு உடைக்கப்பட்டபோது நான் வீட்டிற்குள் இருந்தேன்; காலை 9½ மணிக்கு மூன்று போலீஸ்காரர்கள் தெரு வழியாகச் செல்வதைக் கண்டேன்."

105-வது சாட்சி

பின்னர், செல்வநாதன் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் தூத்துக்குடி கிராம ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர்; ஜூலை 15-ந் தேதி பகல் தோராயமாக வேலைக்காக மீளவட்டான் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றேன்; அங்கு டிரெயின் வந்தவுடன், எஞ்ஜின் கண்ணாடி உடைந்திருந்ததை பார்த்தேன்; எஞ்ஜினிலிருந்து சில கற்களைக் கைப்பற்றினேன்; தூத்துக்குடி புலன் விசாரணைக் கமிட்டிமுன் உடைந்த கண்ணாடித் துண்டுகளையும், கற்களையும் சமர்ப்பித்தேன்."

திரு. ஆர். தண்டபாணியால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

"ஜூலை 15, அல்லது 16-ந் தேதி என் ஸ்டேஷனில் யாரும் காவலில் வைக்கப்படவில்லை."

106-வது சாட்சி

பின்னர், கந்தசாமி பண்ணையார் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான், வயல் வேலை செய்கிறேன்; என் கடை புதுக் கிராமத்தில் உள்ளது; செப். 29-ந் தேதி கிரேட் காட்டன் ரஸ்தா வழியாகச் சென்றுகொண்டிருக்கையில், போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், துரைசாமி என்ற அந்தோணியை (87-வது எதிரி) கைது செய்ததைப் பார்த்தேன்; எதிரியிடமிருந்து போலீசார் சில பென்சில் கட்டுகளைக் கைப்பற்றினர்; அத்தாட்சிப் பத்திரமொன்றை சப்-இன்ஸ்பெக்டர் தயார் செய்தார்; நான் அதில் கையொப்பமிட்டேன்."

திரு. ஆர். தண்டபாணியால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

"வெற்றிலைப் பாக்குக் கடையிலிருந்து நூல் வாங்குவதற்காக அந்த ரோடு வழியாகச் சென்றேன்; எனக்கு ஆங்கிலம் படிக்கவோ, எழுதவோ தெரியாது; அத்தாட்சிப் பத்திரத்தைப் பூராவாகப் படிக்கவில்லை."

பொத்தனூர் (சேலம்) தி. மு. கழகம்

இவ்வூர் தி மு. கழகத்தோழர்களால் 12—1—54 அன்று கைத்தறித் துணி விற்பனை செய்யப்பட்டது பொங்கலன்று வள்ளுவர் நிலையத்தில், பொங்கல் விருந்து எல்லோருக்கும் அளிக்கப்பட்டது.

வாழ்த்தும் — நன்றியும்

"பொங்கல் வாழ்த்து அனுப்பிய தோழர்களுக்கும், அனுப்பாத ஏனைய தோழர்களுக்கும் இதன் மூலம் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

கே. கே. நீலமேகம்

தஞ்சை மாவட்ட செயலாளர்,

கும்பகோணம்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமனுதன், சாமிநாத அய்யர், ராஜி அய்யர் ஆகியோர்	2—0—0
சிறுமுகை புதூர் தி. மு. கழகம்	7—0—0
வால்பாறை ஆர். பிச்சமுத்து	1—7—0
தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலம்:—	
சென்னை சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழகப் பொதுக்கூட்ட வசூல்	18—5—0
குளூர் பொதுக்கூட்ட வசூல்	6—4—6
,, ஆர். எஸ். மணி பீடி தொழிலாளிகள்	2—5—9
,, புட்பராஜ் டேம், திரு. வி. க. படிப்பகத்தார்	1—8—0
சுல்தான்பேட்டை தி. மு. கழகம்	10—0—0
குளூர் தாளமுத்து-நடராசன் படிப்பகத்தார் மூலம்	65—0—0
சென்னை ஸ்பென்சர் கம்பெனி ஊழியர்கள்:—	
இருதயராஜ், நீலமேகம், கிருஷ்ணன் விநாயகம், பாலகிருஷ்ணன், ஜெயவேல ஆகியோர்	3—0—0

திருமதி அருள்மொழி மூலம்:—	
சுற்கண்டார் கோட்டை கழகப் பொதுக்கூட்ட வசூல்	5—0—5
பட்டூர் பொதுக்கூட்ட வசூல்	15—0—0
சங்கரன் கோயில் பொதுக்கூட்ட வசூல்	6-11—0
கிழப்பூங்குடி பொதுக்கூட்ட வசூல்	3—0—0
நாமக்கல் கூட்டத்தில மாலை ஏலம் விட்டதில்	9-10—0
சென்னை-6 தமிழரசன்	1—0—0
,, டி. சுப்ரமணியன்	1—0—0
,, அ. சோமசுந்தரம்	1—0—0
,, எஸ். ராசாபாய்	1—0—0
,, ஜி. மாணிக்கமணி	1—0—0
,, து ஆறுமுகம்	1—0—0
,, அ. பாலகிருஷ்ணன்	1—0—0
,, எம். ஆறுமுகம்	1—1—0
,, தா. உழவன்	2—0—0
ஊத்துமலை எஸ். சங்கர குமார்	1—0—0
ஆக மொத்தம் ...	12,037—1—1

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.